

நீலகிரி மாவட்டம், உதகை பகல்கோடுமந்து பகுதியில் தோடர் பழங்குடிய மக்களுக்காக திறக்கப்பட்ட 'நெர்ஸ்ரோவ்' தோடர் எருமை பால் மதிப்புக் கூட்டு மையத்தினை அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு மரக்கன்றுகளை நட்டார்.





வேலூர் மாவட்டம், அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி, பள்ளி கொண்டா பேரூராட்சி பகுதியில் புதிய தீயணைப்பு நிலையத்தை மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. திறந்து வைத்து தீயணைப்பு வாகனத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார். உடன் மு.பாபு, பி.வெங்கடேசன், கோ.குமரபாண்டியன், ஜாகீர் உசேன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ரூ.14.35 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் திறப்பு!

# அரியலூர் மாவட்டத்தில் புதிய வழித்தடத்தில் பேருந்து நீட்டிப்பு!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், அக். 14 –

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், புங்கங்குழி ஊராட்சி, ஆதனூர் கிராமத்தில் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் ரூ.14.35 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர் மட்ட பாலத்தினை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களிடம் சென்னையில் ஆதனூர் கிராமத்தைச் சார்ந்த மாணவி தமது ஊருக்கு கூடுதல் பேருந்து வசதி கேட்டு கோரிக்கை வைத்தார். அந்த கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் உடனடியாக நிறைவேற்றும் விதமாக

ஆதனூர் கிராமத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம், அரியலூர் கிளை சார்பில் அரியலூர் சுண்டக்குடி செல்லும் பேருந்தை ஆதனூர் வரை புதிய வழித்தடத்தில் நீட்டிப்பு செய்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஸ்வேஷ் பாலசுப்ரமணியம் சாஸ்திரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசின் போக்குவரத்து கழகம் சார்பில், பொதுமக்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் உள்ளிட்டோர்களுக்கு அரசு பேருந்து சேவை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றையதினம் அரியலூர் மாவட்டம், புங்கங்குழி ஊராட்சி, ஆதனூர் கிராமத்தில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் RIDF XXVI திட்டத்தின் கீழ் மருதையாற்றின் குறுக்கே, ரூ.14.35 கோடி மதிப்பீட்டில் ஆதனூர் மழவராயநல்லூர் சாலை கி.மீ 0/6ல் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, ஆதனூர் கிராமத்தில் அரியலூர் சுண்டக்குடி செல்லும் பேருந்தை பொதுமக்கள் மாணவ, மாணவிகள், வியாபா ரிகள் உள்ளிட்டோர் பயன்பெறும் வகையில் ஆதனூர் வரை புதிய வழித்தடத்தில் நீட்டிப்பு செய்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

ஆம்னி பேருந்துகளை பொறுத்தவரையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவர்களை அழைத்து பேசி அவர்கள் நிர்ணயித்திருந்த தொகையை விட குறைத்து பேருந்துகளை இயக்கினார்கள். கடந்த ஆயுத பூஜை விடுமுறை காலங்களில் ஒரு சில ஆம்னி பேருந்துகள் கூடுதல் கட்டணம் வசூலித்ததாக வந்த தகவலின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த தீபாவளிக்கு தனியார் பேருந்து நிறுவனங்களை அழைத்து பேசுவதற்கு போக்குவரத்து துறை ஆணையர் அவர்கள் காவல்துறையோடு இணைந்து கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளனர். இதற்கிடையே நேற்றைய தினம் 10க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கூடுதல் கட்டணம் வசூலிப்பதாக தகவல் வந்திருக்கிறது. ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகளு டன் பேசியிருக்கிறேன். அவர்களும் சம்மந்தப்பட்ட நபர்களுக்கு அறிவுரைகள் வழங்குவதாக தெரிவித்துள்ளார்கள். கிட்ட தட்ட 500க்கும் மேற்பட்ட தனியார் பேருந்து நிறுவனங்கள் இருக்கின்ற சூழலில் 10 நபர்கள் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுப்பட்டுள்ளார்கள்.

நாளைக்குள் அவர்கள் அந்த கட்டணத்தை குறைக்காவிட் டால் தீபாவளிக்கு முன்பாகவே உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், கும்பகோணம் நிர்வாக இயக்குநர் தசரதன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம் பொது மேலாளர் டி. சதீஸ்குமார், மற்றும் ராம்குமார் நெடுஞ்சாலைத்துறை நபார்டு மற்றும் கிராம சாலைகள் கோட்டப் பொறியாளர் எஸ்.சரவணன், உதவிக் கோட்டப்பொறி யாளர் எஸ். ஜெயந்தி, உதவிபொறியாளர் டி.ராஜா, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா.கென்னடி, மா.அன்பமுகன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன், தொழிற்சங்க பிரதிநிதிகள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் இதர அரசு அலுவலர்கள்; உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையம் சார்பில்

# மாவட்ட அளவிலான சுகாதார பேரவைக் கூட்டம்!

## தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் சிறப்புரை!



உதகை, அக். 14 -

முதல்வர் தளபதி அவர்களின் நல்லாட்சியில், நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடி யினர் பண்பாட்டு மையத்தில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் நடை பெற்ற மாவட்ட அளவிலான சுகாதார பேரவை கூட்ட த்தினை, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இக்கூட்டத்தில், அரசு தலைமைக் கொறடா தெரிவித்ததாவது: -

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். ஒரு நாட்டின் வளர்ச்சி கல்வி மற்றும் மருத்துவம் ஆகும். எனவே கல்வி மற்றும் மருத்துவத்துறையினை மேம்படுத்தும் வகையில் அதிக அளவில் நிதி ஒதுக்கீடு அரசால் செய்யப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் அரசு மருத்துவமனை, கோத்த கிரி அரசு மருத்துவமனையில் கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனை என்பது நீலகிரி மாவட்டத்திற்கு கிடைத்த ஒரு மைல் கல் ஆகும். நோயாளிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளும் இம்மருத்துவமனையில் உள்ளது. இம்மருத்துவமனைக்கு 1500க்கும் மேற்பட்ட வெளிப்புற நோயாளி கள் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். குறிப்பாக, மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள் நோயாளிகளிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சுகாதார பேரவை கூட்டம் நடத்தப்படுகிறது.

அதனடிப்படையில் இன்றைய தினம் 2024 - 2025ஆம் ஆண்டிற்கான மாவட்ட சுகாதார பேரவை கூட்டம் இன்று முழுவதும் நடத்தப்பட்டு அனைத்து வட்டாரம் மற்றும் துறைகளில் சுகாதாரத்துறை மேம்பட தேவையான கட்டமைப்பு வசதிகள், மருத்துவ உபகரணங்கள், போக்கு வரத்து வசதி போன்றவை குறித்து ஆலோசிக்கப்பட்டு, பரிந்துரை செய்யப்பட்டு, மாவட்ட அளவிலேயே சரி செய்யக் கூடியவை, மாநில அரசு உதவியுடன் சரி செய்ய கூடியவை மற்றும் சுகாதார பேரவை மூலம் சரி செய்யக்கூடியவை என பிரிக்கப்பட்டு, மாநில பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டு மாநில பேரவையில் முதலமைச்சர் அவர்கள் முன் திட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலனை செய்யப்படவுள்ளது. எனவே அனைவரும் தங்களுக்கு தேவையான தேவை களை தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அரசு தலைமைக் கொறடா தெரிவித்தார்.

இதில் உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஸ்ரீசரவணன், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு. ராஜசேகரன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) சோமசுந்தரம், நகர்மன்ற தலைவர்கள் திருமதி. வாணீஸ்வரி (உதகை), திருமதி பரிமளம் (கூடலூர்) உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி வடக்குத்து ஊராட்சியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். அ.குணசேகரன் , ஏழுமலை, இராம.வெங்கடேசன் , ஆனந்த ஜோதி, தர்மலிங்கம் பாக்கியராஜ், கோபு , பிச்சையா , வாஜித் , கோபால் ஸ்டாலின் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருப்பத்தூர் தொகுதி – திருப்பத்தூர் நகராட்சியில்

# 33வது வார்டில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் குடிநீர் விநியோகப் பணிகள்!

## அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

திருப்பத்தூர், அக். 14 -

திருப்பத்தூர் சட்டமன்றத்தொகுதி திருப்பத்தூர் நகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட 5 வார்டுகளுக்கு கூட்டுக்குடிநீர் திட்டத்தின் வாயிலாக குடிநீர் விநியோகம் செய்திட அப்பகுதி மக்கள் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பியிடம் தொடர்ந்து கோரிக்கை வைத்து வந்தனர்.

கடந்த ஆட்சிகாலத்தில் சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்தும், கோரிக்கை கடிதம் வழங்கியும் கடந்த ஆட்சியாளர்கள் செவிசாய்க்கவில்லை

தொடர்ந்து எல்லோர்க்கும் எல்லாம் வழங்கும் கழக ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பொதுப்பணி நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், நகர்புறவளர்ச்சித்துறை அமைச்சர் ஆகியோரை சந்தித்து இப்பணிக்கு ஆவண செய்ய கோரிக்கை வைத்தார்கள். அதன் பலனாக,

1. வார்டு 33 தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பகுதி 1 பகுதியில் மினி OHT 2000லி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.0.60 லட்சம் மதிப்பீட்டில் திறந்து வைக்கப்பட்டது.

2. வார்டு 33 தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பகுதி 1 பகுதியில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல் நிலை நீர்தேக்க தொட்டி குடிநீர் விநியோக பைப் லைன்கள் 1.50 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் இப்பணிக்கு அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அரசு சார்பாக நகராட்சி ஆணையர்.சாந்தி, நக்கீரன், நகர செயலாளர் சு.ராசேந்திரன், நகர சேர்மென் சங்கீதா வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர்.சு.அரசு, அன்பழகன், வார்டு கவுன்சிலர்கள் எஸ். கோபிநாத், ஜெ.கலீல், டி.எம்.சுதாகர், பி.செல்வி உள்ளிட்ட வார்டு பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் தொகுதி திருப்பத்தூர் நகராட்சி அண்ணாநகர் பகுதியில் ஒரு கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்த மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ., எல்லோர்க்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியில் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு முழுவதும் வளர்ச்சிப் பணிகள் அனைத்து துறைகள் வாயிலாக மக்கள் போற்றும் வகையில் நடைபெற்று வருகின்றது.

பொதுப்பணி நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலில் திருப்பத்தூர் மாவட்டம் அசுர வேகத்தில் வளர்ந்து வருகின்றது. திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் மக்கள் தேவையறிந்து சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. மக்கள் தேவைகளை அரசிடம் கொண்டு சென்று பணிகளுக்கான அனுமதி பெற்று அனைத்து அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்றி வருகின்றார்.

அதன்தொடர்ச்சியாக திருப்பத்தூர் நகராட்சி அண்ணாநகர் பகுதியில் 1.20 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் க.சிவசௌந்திரவல்லி, மற்றும் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தலைமையில் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அரசு சார்பாக மாவட்ட சுகாதார மருத்துவர்.வினோத். வட்டார மருத்துவர். சௌந்தர்யா, நகராட்சி ஆணையர்.சாந்தி, எம்.இ. நக்கீ ரன், நகர செயலாளர் சு.ராசேந்திரன், நகர சேர்மென் சங்கீதாவெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர்.சு.அரசு, மா.க.இ.து. அ.வி. அன்பழகன், வார்டு கவுன்சிலர்கள் எஸ்.கோபிநாத், ஜெ.கலீல், டி.எம். சுதாகர், பி.செல்வி உள்ளிட்ட வார்டு பிரநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன் முன்னிலையில் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, வளவனூர் பேரூராட்சியில் தமிழக வெற்றிக் கழகம் கட்சியைச் சேர்ந்த 50ற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் தொகுதி பார்வையாளர் துரை.கி.சரவணன், இரா.ஜனகராஜ், செ.புஷ்பராஜ், வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், தயா.இளந்திரையன், பா.ஜீவா, சுவை சுரேஷ், ப.அன்பரசு மற்றும் கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

### தி.மு.க. மகளிர் அணி

# திருப்பூர் மத்திய மாவட்டம்

## திருப்பூர் தெற்கு மாநகர அமைப்பாளர் நியமனம்!

தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு

திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகர மகளிர் அணி அமைப்பாளராக உள்ள சா. மகேஸ்வரி அவர்களுக்கு பதிலாக திருமதி. **மு. விஜயா** (1, மாரியம்மன் கோவில் வீதி, முருகம்பாளையம், திருப்பூர் 641604,) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநகர மகளிர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


**"அண்ணா அறிவாலயம்"**<br>சென்னை - 600018<br>நாள்- 11.10.2025

**ஜெ.ஹெலன்டேவிட்சன்,**<br>செயலாளர்<br>தி.மு.க. மகளிர் அணி

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## அம்பத்தூர் பா. இரவைக்கண்ணன்

## அக்டோபர் 14 (1992)



அம்பத்தூர் நகரக் கழகத்தின் செயலாளராக பல ஆண்டுகள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார். மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

துணிவுமிக்க உள்ளம்! பணிவுமிக்க பண்பாடு! கொள்கையில் உறுதி! குறிக்கோளுக்காக தியாகம் செய்யும் இயல்பு! என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**<br>**தி.மு.க.**